# இணைய வெளியில் உங்கள் பாதுகாப்பிற்கு தேவையான ஒரே கருவி



## தகர்க்க முடியாத பாதுகாப்பு

இணைய தீவிரவாதிகள், கணினி வைரஸ்கள், எரிதங்கள், எதிரிகள், ஸ்பைவேர், ஆட்வேர் – தினசரி நீங்கள் சந்திக்கும் இடர்கள் தான் எத்துனை?.. எத்துனை?.. இந்த தொல்லைகளை எதிர்த்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பு அளிக்க அறிமுகப்படுத்துகிறோம் – **கத்திரிக்கோல்.**

இதனை உபயோகிப்பது எப்படி?

உங்கள் வலது கையில் கத்திரிக்கோலை பிடித்துக்கொளுங்கள். இடது கை பழக்கம் உள்ளவர்கள் இடது கையிலும் பிடித்துக் கொள்ளலாம். இன்னொரு கையில் உங்கள் கணினியை இணையத்துடன் இணைக்கும் கம்பியினை (அல்லது வயர்'இனை) பிடித்துக் கொள்ளவும். இப்பொழுது கத்திரிக்கோல் கொண்டு தயவு தாட்சண்யம் பார்க்காம் வயரினை துண்டு துண்டாக வெட்டவும்.

ஆம். இப்பொழுது உங்கள் கணினியினை இணையத்தின் மூலமாக எவரும் தாக்க முடியாது. வலைப்பதிவுகளை வாசிக்கும் நேரமும் குறைந்து போகும். அலுவலகத்தில் நீங்கள் வேலை செய்வதை பார்த்து உங்கள் மேலதிகாரியும் பாராட்டுவார்.

இந்த தொழில்நுட்பத்தை ப்ளாக்கருக்கும் எழுதி அனுப்புங்கள். அவர்களும் இதனை பயன்படுத்தி தங்கள் வழங்கிகளின் பாதுகாப்பினை பலப்படுத்திக் கொல்லட்டும்.

இணையம் மூலம் இந்த விசேட கருவியினை வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


காயலான் கடை
ஜாஃபர்கான் பேட்டை
சென்னை